orientation
orientamento
berufsberatung
.ch

Informationen in anderen Sprachen
Informations en langues étrangères
Informazioni in lingue straniere

# நான் வேலையைத் தேடுவதா அல்லது ஒரு தொழிற்கல்வியை விரும்புவதா?

## கோப்பைகளைக் கழுவுவது விடுதியின் இயக்குனராவது? பொருட்களை அடுக்கி சுப்பர்மாக்கட்டின் அதிபராவது?

இப்படியான தொழில் முன்னேற்றங்கள் சுவிசிலும் நடப்பதுண்டு, ஆனால் மிக அரிதாகவே நடைபெறும். சுவிசில் அதிக காலம் வாழ்ந்திராத இளம் பெண்கள் ஆண்கள், ஒரு தொழிற்கல்வியை மேற்கொள்வதே சிறந்தது. அவர்கள் ஏன் ஒரு தொழிற்கல்வியை முடிவுசெய்தார்கள் என்பதற்கு அவர்களுக்குத் தனிப்பட்ட விதமான காரணங்கள் உண்டு:

*«நீங்கள் சுவிசில் வாழ்ந்துகொண்டு ஒரு தொழிற்கல்வியைக் கற்றிராவிட்டால், தொழில்ரீதியாக அதே இடத்திலேயே இருப்பீர்கள். வாழ்க்கை முழுவதும் அதே தொழிலையே செய்ய வேண்டியிருக்கும்.* ***ஆனால் எனக்கு ஒரு நல்ல தொழில் வேண்டும், தொழிலில் பொறுப்புணர்வுடன் இருக்கவேண்டும், தொழிலில் நன்கு முன்னேற வேண்டும் என்ற விருப்பமுள்ளது,***
*Khyber Ahmadzy*

*«நான் தனிப்பட்ட மற்றும் தொழில்ரீதியாக இயலுமானவரை வெகு விரைவாக இங்கு சுவிசில் ஒத்துழைத்து முன்னேற விரும்புகிறேன். ஆகவே நான் ஒரு தொழில் பயிற்சி செய்யவும் அதன்மூலம் ஒரு தொழிற்கல்வியைக் கற்கவும் என்னைத் தயர்படுத்துகின்றேன்.»*
*Ruth Girmay*

*«நான் உதவி வேலையாளாக பணம் சம்பாதிக்கிறேன். உண்மையாக எனக்கும் பலவற்றை செய்யவேண்டும் என்ற விருப்பம் இருந்துது, ஆனால் கேள்விகள் கேட்பதற்கு எனக்கு நேரம் இருக்கவில்லை. நான் விரைவாகவும் புத்திசாலித்தனமாகவும் வேலை செய்யவேண்டியிருந்தது. தொழிற்கல்வி இல்லாமல் குறைந்த ஊதியத்திற்கு உதவியாளராக செய்யும் வேலையில், நிறுவனத்திற்கு போதியளவு வேண்டுகோள்கள் வராவிட்டால் வேலையை இழந்துவிடுவேன். இது எனக்கு இரு தடவைகள் நடந்துவிட்டது.»*
*Luis Neto*

*«நான் ஒரு முஸ்லிம் பெண்ணாக, ஒரு தொழில் செய்பவளாகவும், எனது சொந்தப் பணத்தை உழைப்பவளாகவும் காட்டுவது எனக்கு முக்கியமாக உள்ளது.»*
*Gul Afroz Haidari*

*«நான் ஒரு தொழிலைத் தெரிவுசெய்தேன், அதற்கு எனது முன் அனுபவத்தை பாவிக்க முடிந்தது. இப்போது நான் ஒரு வருடமாக வேலை செய்வதுடன், பணம் சம்பாதிக்கிறேன். பின்பு நான் துறைசார் உயர்கல்லூரியில் உயர்கல்வி கற்க விரும்புகிறேன்.»*
*Preethy Vadakkadath*

*«எனது தந்தை எனக்கு கற்குமாறு உற்சாகமளித்தார். அவர் 60ம் ஆண்டு தொடக்கத்தில் சுவிசுக்கு வந்து உதவியாளராக வேலைசெய்தவர். அவர் எப்பொழுதும் கூறுவார்: என்னிலும் பார்க்க நன்றாகச் செய்யுங்கள், எப்பொழுதும் மற்றவருக்காக வேலை செய்யாதீர்கள்.»*
*Marius Pinsini*

*«தொழிற்கல்வியின் பின்னர் எனக்கு துறைசார் அறிவு இருக்கும், இது தொழில் தேடுவதற்கு எனக்கு உறுதியைக் கொடுக்கின்றது. நான் பணம் சம்பாதிக்கலாம், சொந்தமாக வாழலாம். அத்துடன் நான் எனது தலையை உயர்த்திக் கொள்ளலாம். நான் சிலவற்றை அடைந்து விட்டேன். தொழிற்கல்வி எனது வாழ்விற்கு அடித்தளமாக உள்ளது.»*
*Farhan Abdi Omar*

நீங்கள் இந்த இளம் பெண்கள் மற்றும் ஆண்களை மேலும் சிறப்பாகக் கண்டறியப் விரும்புகின்றீர்களா? ஏன் அவர்கள் கட்டாயமாக ஒரு தொழிற்கல்வியை செய்ய விரும்பினார்கள் என்பது விளங்குகின்றதா? கைநூலான «பாடசாலைக்குப் பின் என்ன?» என்பதில் நீங்கள் அவர்களின் கருத்துக்களைக் காணலாம்.

## தன்னை ஒருசில வருடங்கள் ஈடுபடுத்தினால்- அதன் பலனை வாழ்வு முழுவதும் உணரலாம்

«நான் ஒரு கடையில் தொழில்கற்க ஏன் எனக்கு மொழி நன்கு தெரிந்திருக்க வேண்டும்? சுப்பர்மாக்கட் கடைகளில் காசுப்பபட்டடையில் வேலைக்கு உள்ளவர்களை அவதானித்துள்ளேன், அவர்களுக்கும் மொழி நன்கு தெரிவதில்லை.»

*அல்லது:* «ஏன் நான் கணிதம் கற்கவேண்டும் - அது எனக்கு இனிமேல் வாழ்க்கை முழுவதும் தேவைப்படாது. »

*அல்லது:* «தொழிற்கல்வியின்போது நான் குறைவான பணத்தை சம்பாதிப்பேன். »

ஒரு அடிப்படைத் தொழிற்கல்விக்கு அதிகமானவர்கள் இரண்டு, மூன்று வருடங்களை மூலதனமிடுகிறார்கள். அவர்கள் ஒரு தொழிலைக் கற்க விரும்புகிறார்கள், அவர்கள் ஒரு சாதாரணமான உதவித் தொழிலைப் பெற விரும்புவதில்லை.

ஒரு தொழிற்கல்வி கற்பதற்கு முடிவுசெய்வது, முழுமையான தொழில் வாழ்விற்கும் பலனளிக்கும். எது உங்களுக்கு முக்கியமானது? நீங்கள் எவ்வாறு முடிவெடுக்கப் போகின்றீர்கள்?

### நான் முதலில் ஒரு தொழிற்கல்வியைக் கற்பேன்

நான் மொழியை நன்கு அறிந்துள்ளேன் அத்துடன் சிறந்த பொதுஅறிவைக் கொண்டுள்ளேன்.

நான் ஒவ்வொருநாளும் அதே வேலையை செய்யத் தேவையில்லை, எனக்கு மாறுதல்கள் இருக்கும்.

நான் குழுவில் சேர்ந்து கதைக்கலாம், சிலவேவைளகளில் முடிவும் எடுக்கலாம்.

நான் பொறுப்பு வகிக்கின்றேன்

எனது மேலதிகாரிகள் என்னை மிகவும் நம்புகிறார்கள்.

எனது மேலதிகாரிகள் என் ஆர்வத்தை ஈடுபடுத்தினால் பாராட்டுகிறார்கள்.

நான் அதிகமாக எனது வேலையை சொந்தமாக செய்யலாம்.

எனக்கு நல்ல ஊதியம் கிடைக்கிறது.

பகுதிநேரமாக வேலைசெய்தாலும், நல்ல வாழ்க் கைக்குத் தேவையானதை உழைப்பேன்.

எனக்கு புதியதைக் கற்கவேண்டுமென்றால், எனது வேலையிலிருந்து மாறிவிடுவேன்.

என்னால் எனது முன்னேற்றத்தைத் திட்டமிடவும் படிப்படியாக அதை நிறைவேற்றவும் முடியும்.

நான் மேலே தொடர்ந்து கற்கலாம்.

நான் விரும்பினால், என்னால் வேறொன்றை செய்ய முடியும், வேறு தொழிற்பகுதிக்கு மாறலாம், ஒரு புதிய தொழிற்கல்வியைத் தொடங்கலாம்.

### நான் தொழிற்கல்வி இன்றி வேலை செய்கிறேன்

நான் விரைவாக பணம் சம்பாதிக்கிறேன்.

நான் ஒவ்வொரு நாளும் அதையே செய்கிறேன்.

எனது வேலை இலகுவானது, நான் அதை விரைவாகக் கற்றுக்கொண்டேன்.

ஒரு தொழிற்கல்வியைக் கற்றவர்களிலும் எனது வேலை உடல்ரீதியாக மிகவும் சிரமம் உள்ளது.

எனக்கு மிக அரிதாகவே சம்பள உயர்வு கிடைக்கிறது.

நான் வேலையை மாற்றினாலும், எனது சம்பளம் உயராது.

நான் வேலையை மாற்றினாலும், ஒரு விருப்பமான வேலையைப் பெற முடியாது.

ஏனைய அனைவரும் நான் என்ன செய்யவேண்டும் எனக் கூற முடியும்.

அதிகமாக எனக்கு சோம்பலாக உள்ளது.

நான் மேலே கற்க முடியாது ஏனென்றால் எனக்கு அடிப்படைத் தொழிற்கல்வி இல்லை.

நிறுவனத்தில் வேலை குறைந்தால் தொழிற்கல்வி கற்றவரை விட நான் விரைவாக வேலையிலிருந்து நீக்கப்படுவேன்.

நான் வேலை இழந்தால், ஒரு புதிய வேலையைப் பெறுவது மிகவும் சிரமம். கற்காதவர்களுக்கு தொழில் இடங்கள் அதிகமாக இருப்பதில்லை.